ஊழல் பற்றிக் கவனம் செலுத்தல்

கதை 1

என்னிடம் அடையாள அட்டை உள்ளது. ஆனால் எனது பிறப்பு சான்றிதழைத் தொலைத்துவிட்டேன். எனது தாயார் கடும் சுகவீனமுற்றபோது, அவருக்கு மருந்து வாங்குவதற்கு எனது ஊழிய சேமலாப நிதி தேவைப்பட்டது. தோட்டம் மூலம் அதனைப் பெறுவதற்கு சகல ஆணவங்களும் தேவை. குறைந்தது காசோலை பெறுவதற்கு ஆறுமாதங்களாவது செல்லும், முதலாளி மாத்தையா சகல ஆவணங்களையும் தயாரித்து ஒரு மாத காலத்துள் எனது பணத்தைப் பெற்றுத் தந்தார். நான் கடனில் எந்தப் பொருட்களையும் பெறாததால் 7,000 ரூபாவை மாத்திரமே அறவிட்டார்.

செல்லம்மா (சுது அவரது உண்மைப் பெயரல்ல) 12 வயது தொடக்கம் தோட்டத்தில் வேலை பார்த்தவர், அவர் இது ஒரு ஊழல் நடவடிக்கை என்பதை உணரவில்லை. 35 ஆண்டுகளாக, அவர் தோட்டத்தில் அடிமையாக உழைத்துள்ளார். அவரது மொத்த ஊழியர் சேமலாப பணம் ரூபா 2,45,000 அவர் பதுளையில் உள்ள பிரபல வர்த்தக ஸ்தாபன உரிமையாளருக்கு 7,000 ரூபா கொடுத்தார். அவருக்கு அவசியமாகப் பணம் தேவைப்பட்டது.

''முதலாளி என்னுடன் வங்கிக்கு வந்தார். காசோலையை மாற்றியதும் 7,000 ரூபாவை எடுத்துக் கொண்டார். நான் அவரிடம் எனது தாயாரின் சுகவீனத்தை கவனத்தில் எடுத்து 1,000 ரூபாவாவது குறைத்து எடுக்குமாறு கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். அவர் மறுத்துவிட்டார். என்ன செய்வது பணத்தைக் கொண்டு என் தாயாரைக் காப்பாற்ற முடிந்தது என்று அந்தப் பெண் அழுதார்.

கதை 02

எனது மகன்மார் இருவரும் சட்ட விரோத இறத்தினக் கல் அகழ்வுச் சுரங்கத்தில் வேலை பார்க்கச் சென்றனர். பொலிசார் அவர்களைப் பிடித்துச் சென்றனர். அவர்களைப் பிணையில் எடுக்க 5,000 ரூபா தருமாறு சட்டத்தரணி கேட்டனர். என்னிடம் ஊழியர் சேமலாப நிதி மாத்திரமே இருந்தது. எனக்கு 50 வயதான காரணத்தால் அதனை எடுக்க முடியாது என்று தோட்ட நிர்வாகம் கூறிவிட்டது. முதலாளியும் முதலில் இதனையே சொன்னார். அவரிடம் கெஞ்சிக் கேட்டபோது அவர் எனது பாஸ் புத்தகத்தை தன்னிடம் தரும்படி கூறி 20,000 ரூபாவை கடனாகக் கொடுத்தார். பின்னர் மேலும் 10,000 ரூபா கொடுத்தார். ஊழியர் சேமலாப நிதி கிடைத்தபோது, அவர் அந்தப் பணத்தை வைத்துக் கொண்டார். ஆவணத் தயாரிப்பு தனக்கு வரவேண்டிய கட்டணம், கடன் பணம், வட்டி என்பனவற்றைக் கழித்துக் கொண்டு மேலும் 50,000 ரூபா தருவதாகக் கூறினார். நான் நிறையச் செலவழித்துவிட்டேன் என்பதை அறிவேன், ஆனால் எனது இரு மகன்களையும் காப்பாற்ற அவர் பணம் கொடுத்து உதவியதை என்னால் மறக்க முடியாது.''

கண்களில் கண்ணீர் மல்க இந்தக் கதையைக் கூறிய அந்தப் பெண் - எந்த பெயரையும் வெளியில் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

கதை 3

இங்கு பலரும் சேமலாப நிதியை முதலாளியிடம் இருந்தே பெற்றுக் கொள்கின்றனர். ஆவணங்கள் பூர்த்தி செய்யப்படாவிட்டாலும், அவர் பணத்திற்கு ஏற்பாடு செய்கிறார். ஒருவர் தோட்ட அதிகாரி அல்லது அவருக்கு தெரிந்த ஒருவருடன் செல்லும் பட்சத்தில், அவர் பணம் தருவார். கணக்கில் உள்ள பணத்தொகையைப் பொறுத்ததாக அவரது கட்டணம் அமைந்திருக்கும். ஆக்கக்கூடுதலான தொகை ஒரு இலட்சத்து 10 அல்லது 15 ஆயிரமாக இருக்கும். அதற்கு மேற்படமாட்டாது. இப்படி ஒருவர் கூறினார்.

பதுளைக்கு கள விஜயம் மேற்கொண்டபோது பணமோசடி பற்றி நாம் கேட்டவை இவையாகும். முதலாளிமார்களினால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றி தகவல் திரட்டுவதற்கு எதிர்காலம் எமது கைகளில் என்ற அவிவிருத்தி நிதியம் உட்பட பல சிவில் சங்க அமைப்புகள் எமக்கு உதவின. நாம் எமது ஆய்வை முடிக்கவில்லையாயினும், இவரது நடவடிக்கைகள் பற்றி நிறையத் தகவல்களை ஏற்கனவே சேகரித்துள்ளோம். பாதிக்கப்பட்டோரில் அனேகமானோர் பதுளை, பாசறை, கமேவெல, 81 ஜேம்ஸ் தோட்டம், கெற்றுவல தோட்டம், றொஸட்டோ தோட்டம், மொறகல்ல தோட்டம், டீஸஸ்லாண்ட் உள்ளிட்ட தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள். அனேகமானோர் அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், ஏனைய ஆவணங்களை கொண்டிருக்கவில்லை. ஏனையோர் உடனடியாக பணத்தேவை ஏற்பட்டவர்கள். இந்த மோசடியில் பதுளை பட்டினத்தில் இரு முதலாளிகளும், பண்டாரவளையில் ஒருவரும் சம்பந்தப்பட்டுள்ளார்கள். பாதிக்கப்பட்டோர் தரும் தகவலின்படி அவர்கள் தமது பாஸ் புத்தகத்தை முதலாளிகளிடம் கையளிக்க வேண்டும் என்று தெரிகிறது. ஊழிய சேமலாப நிதி நேரடியாக வங்கிக்கு அனுப்பப்படுகிறது. இந்த நிதிக்கான காசோலை வங்கியின் கணக்கிலிடப்பட்டதும் வங்கியிலேயே முதலாளிக்கு சேர வேண்டிய பணம் அறவிடப்பட்டு விடுகிறது. பாதிக்கப்பட்ட அப்பாவிகள், பயம் காரணமாக விபரங்களை வெளியிடுவதில்லை. முக்கியமான ஆவணங்கள் இல்லாதவிடத்தும், விரைவாக இந்தக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள எவ்வாறு முதலாளியால் முடிகிறது என்பது பெரும் கேள்வியாகும். சேமலாப நிதியம், தொழில் திணைக்களம் ஆகியவற்றில் உயர் உத்தியோகத்தர்கள் இவர்களுடன் ஒத்துழைக்காவிடின் இதனைச் செய்ய முடியுமா? இந்த மாதிரியான பண மோசடி நாட்டின் ஏனைய பாகங்களிலும் நடக்கும் சாத்தியமே காணப்படுகிறது.

இது போன்ற கதைகள் உங்களுக்கு தெரியுமா? அல்லது நீங்கள் பாதிக்கப்பட்டிருந்தால் பின்வரும் முகவரிக்கு எழுதுங்கள்.

ட்ரான்ஸ்பறன்ஸி இன்டர்நெஷனல் இலங்கை
28/1 புல்லேர்ஸ் ஒழுங்கை, கொழும்பு 07
அல்லது ஊழியர் சேமலாப அத்தியட்சகர்
த.பெ.இல 1299 கொழும்பு

ஊழியர் சேமலாப வெப் தளமான www.epf.lk என்பது மூலமாக உங்கள் முறைப்பாடுகளை தெரிவித்துத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

EPF பணமோசடிகளால் பாதிக்கப்படும் தோட்டத் தொழிலாளிகள்

நிகழ்ச்சித் திட்டங்கள் உற்பத்தியை அதிகரிக்க உதவும்

ஊவா மாகாண உற்பத்திப் போட்டியில், பதுளை மாவட்டம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. உத்தியோகத்தர்களின் போக்குகளை மாற்றி சிறந்த பரிபாலனத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் TISL ஏற்பாடு செய்த பயன்தரும் நிகழ்ச்சித் திட்டங்களினால் இந்த வெற்றி கிடைத்துள்ளதாக மாவட்ட செயலர் றோஹன கீர்த்தி திஸநாயக்க தெரிவிக்கின்றார்.

''உங்கள் நோக்கம் எய்தப்பட்டுள்ளது'' என்று அவர் நம்பிக்கையுடன் TISL க்கு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதான விருதுக்கு மேலதிகமாக ஹாலிஎல்ல, ஹப்புத்தள, பண்டாரவல, பாசறை ஆகியவற்றில் உள்ள மாகாண அலுவல்களும் விருதுகளைப் பெற்றுள்ளன. ''உற்பத்தித் திறன் விருதுகள்'' வென்றெடுக்கப்பட்டமை, திறமையையும், உற்பத்தித் திறனையும் அடையாளம் காண்பிக்கப்பட்டதுடன், ஊழியர்களினால் ஊழலைக் கட்டுப்படுத்த நடைமுறைப்படுத்தப்பட்ட சிறந்த பரிபாலனக் கோட்பாடுகளையும் புலப்படுத்துகின்றன.

TISL செயலமர்வில் குடிவரவு உத்தியோகத்தர்கள்

குடிவரவு குடியகல்வுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு அண்மையில் TISL நடத்திய பயிற்சித் திட்ட அங்குரார்ப்பண வைபவத்தில், கட்டுப்பாட்டாளர் நாயகம் பி.ஏ.அபயகோன், இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இவை ஊழியர்களுக்கு அறிவூறுத்துவதுடன் அவர்கள் ஊழலை எதிர்த்துப் போரிடுவதற்கான வழிகைகள் பற்றி தெரிந்து கொள்ளவும் வகை செய்துள்ளன.

சிறந்த பரிபாலன நடவடிக்கைகளுக்கான முயற்சிகளை எடுத்தமைக்காக அவர் TISL க்கு நன்றி தெரிவித்தார். இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பொதுமக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ள அமுலாக்க உத்தியோகத்தர்களும், முகாமைத்துவ உதவியாளர்களும் பங்குபற்றினர். எட்டுக்கு மேற்பட்ட கூட்டத் தொடர்களில் 129 உத்தியோகத்தர்கள், கலந்து கொண்டனர். அங்கு குழுமியிருந்தோரை வரவேற்றுப் பேசிய TISL நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.சி.வெலியாமுன, அரச நிறுவனங்களில் மிகக் குறைவான ஊழல் இடம்பெறும் இடமாக குடிவரவுக் குடியகல்வுத் திணைக்களம், காணப்படுகிறது என்பது நாட்டில் நிலவும் கருத்தாகும் என்றார். லஞ்சம் வாங்காமலும், துன்புறுத்தாமலும், இலங்கை மக்களுக்கு திணைக்கள ஊழியர்கள் வழங்கும் சீரான சேவை இதற்கான காரணமாகும். இது இலங்கையில் நல்லதொரு அறிகுறி என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

பங்குபற்றியோரிடமிருந்து ஆக்கபூர்வமான ஆதரவு

''நேர்மைத் திறனை மேம்படுத்தல்'' என்ற TISL இன் அண்மைய செயலமர்வில் பங்குபற்றியோர் சமூகப் பிரச்சினைகளை திறமையாகக் கையாள்வதற்கு இந் நிகழ்ச்சித் திட்டம் வாய்ப்பு வழங்கியதாக இதனை ஆதரித்துக் கருத்துத் தெரிவித்தனர். நாடெங்கிலும் இத்தகைய நிகழ்ச்சித் திட்டத்தை நடத்த வேண்டிய அவசியத்தை வலியுறுத்திய அவர்கள் பொதுமக்களுக்குமாக இவை நடத்தப்படல் வேண்டும் என்றனர்.

சிலாபத்திலும், பதுளையிலும், உள்ளூராட்சி இலங்கை நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளில் பிரதேச சபைகள் நகர சபைகள், மாநகரசபைகள் ஆகியவற்றின் அங்கத்தவர்கள் பங்குபற்றினர்.

நிகழ்ச்சிகள் ''வெற்றியளிப்பனவாகவும் மிகவும் பயனுள்ளவையாகவும் அமைந்தன என்று இதில் பங்குபற்றியோர் ஏகோபித்த பாராட்டுத் தெரிவித்தனர். அவர்கள் உத்தியோக, மற்றும் தனிப்பட்ட ரீதியில் புதிய அறிவுட்டலை தந்ததாகவும், சிறந்த பரிபாலன நடைமுறைகளைப் பின்பற்றி மக்களின் விருப்பத்தை பூர்த்தி செய்ய உதவியதாகவும் கூறினார்கள். ''நாம் இப்பொழுது மேலும் திறமையுடன் பணியாற்ற முடியும்'' என்றும் அவர்கள் கூறினார்கள்.

டிசம்பர் 9 இல்...

TISL ஐ.நாவின் ஊழல் எதிர்புத் தினத்தை அனுஷ்டிக்கின்றது -

- தேசிய நேர்மைத்திறன் விருது வழங்கல்
- ''சிறந்த பரிபாலன அந்தஸ்து அறிக்கை 2008 வெளியிடுதல்''
- ஊழல் எதிர்ப்பு கார்ட்டூன் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் பெயர்களை அறிவித்தல்
- கேலிச்சித்திரக் கண்காட்சி

இடம்: **BMICH** கொழும்பு.

நேர்மைத்திறன்

ட்ரான்ஸ்பறன்சி இன்டர்நெஷனல் இலங்கை - செய்தியறிக்கை வெளியீடு 3 ஒக்டோபர் 2008

TISL நிறைவேற்றுப் பணிப்பாளர் மீதான கைக்குண்டுத் தாக்குதல் குறித்து உலகளாவிய கண்டனம்

TISL நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.சி.வெலியமுனவின் வீட்டின் மீது செப்டெம்பர் 28ஆம் திகதி இரவு கைக்குண்டுத் தாக்குதல் நடைபெற்றது குறித்து உள்ளூர், சர்வதேச அமைப்புகள் வலுவாகக் கண்டனம் தெரிவித்ததுடன், குற்றமிழைத்தவர்களை கண்டு பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கையும் விடுத்தன.

ஊடக அறிக்கைகள் வெளியாகின, சட்டத்தரணிகள் அடையாள ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர், பல சிவில் அமைப்புகளும், இலங்கையின் சட்டத்தரணிகள் சங்கத்தின் (BASL) தூதுக்குழுவினரும், ஜனாதிபதியைச் சந்தித்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினர்.

சுதந்திரமான நேர்மையான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை அமைப்பு (PAFEREL) மார்கா நிறுவனம், தேசிய சமாதான மன்றம் (NPC) தெற்காசிய சிறிய ஆயுதக் கட்டுப்பாட்டு அமைப்பு (SASANET) சுதந்திரமான நேர்மையான தேர்தலுக்கான இயக்கம் (CaFFE) என்பன அவற்றின் பங்காளி அமைப்புகளினது ஆதரவுடன் லிப்டன் சுற்றுவட்டத்தில் ஒக்டோபர் 3ஆம் திகதி நடத்திய பொதுமக்களின் ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

தாக்குதல் இடம்பெற்ற இரண்டு நாட்களின் பின்னர் கொழும்பு உயர் நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு வெளியே நடத்தப்பட்ட அடையாள ஆர்ப்பாட்டத்தில், பெரும் எண்ணிக்கையிலான சட்டத்தரணிகள் பங்குபற்றினர். சட்டத்தரணிகள் மீதான தாக்குதல், அச்சுறுத்தல் என்பன தனிப்படுத்திக் கவனிக்கப்பட வேண்டியதல்ல என்று குறிப்பிட்ட அவர்கள், இந்த நாட்டின் முழு சட்ட உரிமைக்கும் எதிரான தாக்குதல் இது என்று வர்ணித்தனர். இதேவேளையில், பல்வேறு அமைப்புகளில் இருந்து அறிக்கைகள் வந்து குவிந்தன.

..... பக்கம் 02 ஐப் பார்க்க

ஜனாதிபதியின் பணிப்புரைகள்

'குற்றம் செய்வோரை வெளிப்படுத்துங்கள்' என்ற தலைப்பில் அரசாங்கத்தினால் நடத்தப்படும் சண்டே ஒப்சேர்வர் பத்திரிகையின் செய்தியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கைக்குண்டுத் தாக்குதல் பற்றி விசாரணை நடத்தி குற்றமிழைத்தோரை கண்டுபிடிக்குமாறு பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்ரமரத்னவுக்கு உத்தரவு பிறப்பித்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

''எதிர்ப்பை மட்டுப்படுத்தும் இந்தகைய செயல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்'' என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. TISL அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் மீதான தாக்குதல் குறித்து சகல TI அமைப்புகளுக்கும் தெரியப்படுத்தியதுடன், சகலரும் அவரது உயிரைப் பாதுகாக்க ஒன்றிணைந்து செயற்படுவார்கள் என்று நம்புவதாகவும் தெரிவித்தார்.

TISL இன் ஆழ்ந்த அக்கறை

சம்பம் நடந்தவுடன் விடுக்கப்பட்ட அறிக்கையில், ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள், சிவில் சமூகம் என்பவற்றின் மீது தொடர்ந்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவது குறித்து ஆழ்ந்த கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. ''இலங்கை மக்களின் கருத்து வெளிப்பாடு மனச்சாட்சி என்பவற்றை கட்டுப்படுத்துவதற்கான மற்றுமொரு முயற்சி இதுவாகும்'' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டத்தரணிகளின் ஆர்ப்பாட்டம் (இடது) மற்றும் சமூக அமைப்புக்களின் ஆர்ப்பாட்டம்

TI நேர்மையான துரிதமான புலன் விசாரணையைக் கோருகிறது.

ஊழல் எதிர்ப்பு மற்றும் மனித உரிமைக்காக உழைத்தவர்களையும் இலங்கைக்கான சீரான எதிர்காலத்தை உருவாக்கத் தம்மை அர்ப்பணிப்பவர்களையும் அச்சுறுத்துவது குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ள TISL நேர்மையான துரித, வெளிப்படையான விசாரணை நடைபெறுவதை உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை கேட்டுள்ளது. அத்துடன் வெலியமுன, அவரது குடும்பம் இலங்கையில் TI ஊழியர்கள் ஆகியோரின் பாதுகாப்பை உறுதி செய்ய தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறும் கோரியுள்ளது.

இலங்கையில் கருத்துச் சுதந்திரத்தை தடுக்கும் முயற்சியாக ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள், சிவில் சமூகம் என்பவற்றைத் துன்புறுத்தும் தொடர் முயற்சிகளில் வெலியாமுனவின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட அண்மைய குண்டு வீச்சுக் காணப்படுகிறது. இதனைச் செய்தவர்களின் திட்ட வட்டமான நோக்கம் இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை என்று போர்ஸிலிருந்து வெளியான ஒரு அறிக்கை தெரிவிக்கின்றது.

உள்ளே

2 தைரியம், நேர்மைத்திறன் என்பன மீதான ஒரு தாக்குதல்

3 வர்த்தகத் துறையில் நேர்மைத் திறனின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

4 இந்தியாவின் தகவல் உரிமைக்கான சட்டம் நன்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

5 ஊழல் பற்றிக் கவனம் செலுத்தல்

6 நிகழ்ச்சித் திட்டங்கள் உற்பத்தியை அதிகரிக்க உதவும்.

கைக்குண்டுத் தாக்குதல்.....

சிவில் சமூகத்தின் எதிரொலி.

சர்வதேச ஜுரர்கள் அணைக்குழு தாக்குதல் பற்றிக் கூறுகையில் சிரேஷ்ட மதிப்புக்குரிய சட்டத்தரணி ஒருவர் மீதான தாக்குதல் இலங்கையில் அதிகரித்துவரும் மனித உரிமை மீறல்கள், சுதந்திரமான கருத்து வெளிப்பாடு, உரிமை என்பன தொடர்பாக அதிகரித்து வரும் தாக்குதல் ஆகியவற்றிற்கான மையமாகக் கொண்டு கவனிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

இலங்கையின் தொழில் வல்லுனர் அமைப்பு (OPA) தாக்குதல் பற்றிக் கூறுகையில் சிறந்த பரிபாலனம், பொறுப்புக்கூறும் தன்மை, பொது வாழ்வில் நேர்மைத்திறன் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்துவோருக்கு விரிவான செய்தியை அனுப்புவதற்கான ஒரு முயற்சி என்று விபரித்தது.

இந்தத் தாக்குதல், சட்டமீறலும், தனி நபரின் அடிப்படை உரிமைகளில் தலையீடு என்றும் விபரித்துள்ள மனித உரிமைக்கான தெற்காசிய அமைப்பு (SAHR) அது குறித்து பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது. தாக்குதலை பலமாகவும், தங்கு தடையின்றியும் கண்டித்த இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (BASL) தாமதமின்றி தாக்குதல் பற்றி புலனாய்வு செய்து தவறிழைத்தவர்களை, நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்று பொலிசாரைக் கேட்டுள்ளது.

சுதந்திர ஊடக இயக்கம் (FMM) தாக்குதலில் பாரதூரமான விளைவுகள் உள்ளது என்றும், பொதுவாழ்வில் மனித உரிமைகள், சிறந்த பரிபாலனம், பொறுப்புக்கூறும் தன்மை, நேர்மைத் திறன் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துவோருக்கு விரிவான செய்தியை அனுப்பும் ஒரு முயற்சியாகும் என்றும் கருதுகிறது. கண்டிக்கத்தக்க இந்த வன்முறை அச்சுறுத்தல், சிவில் சமூகம் ஊடகம், உட்பட விமர்ச்சிக்கும், எதிர்க்கும் குரல்களை மௌனிக்கச் செய்யும் முயற்சியாகும், சட்டத் தொழில் சுதந்திரத்திற்கும், நேர்மைத் திறனுக்கும் ஒரு தெளிவான சவாலாயும் சட்டம் விதிக்கும், சட்டபூர்வ வழிமுறைக்கும் ஒரு கண்டனமாகவும் உள்ளது.

இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துபவராக திரு.வெலியமுனவை பாராட்டியுள்ள கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம், அதிகாரிகள் இத்தாக்குதல் குறித்து உடனடி விசாரணை நடத்தி குற்றமிழைத்தோரை நீதியின் முன் நிறுத்துவதாகவும் என்று தாம் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள், சிவில் சமூக அமைப்புகள், இப்பொழுது சட்டத்தரணிகள் மீது தாக்குதல்களும் அச்சுறுத்தல்களும் மேற்கொள்ளப்படும் போக்குகள் குறித்து, கவலை தெரிவித்துள்ள ஐரோப்பிய யூனியன் TISL போன்ற சிவில் சமூக அமைப்புகளின் அவசியப் பணிகளுக்கு ஆதரவு வழங்குவதும், அதன் ஊழியர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும், பாதுகாப்பு அளிப்பதும் அவசியம் என்று கூறியுள்ளது.

தாக்குதலுக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரி தேசிய சமாதானப் பேரவை இந்தத் தாக்குதல் பொது வாழ்வில் மனித உரிமைகள், சிறந்த பரிபாலனம், பொறுப்புக் கூறும் தன்மை, எனபவற்றின் மீதான தாக்குதலாக கருதப்பட வேண்டாம் என்று கூறியுள்ளது.

வர்த்தக பேரவை (CCC)- சிறந்த சமூக நடத்தையுள்ளவர்களுக்கான சூழல், பாதுகாப்பு, எனபவற்றை பல அரசியல் பிரமுகர்களுக்கு வழங்கும் அதே அளவில் கிடைக்க வகை செய்வது அரசாங்கத்தின் கடமையாகும் என்று கூறியுள்ளது. இலங்கை ஒரு நாடு என்று வகையில், சிறந்த பரிபாலனம், வெளிப்படைத் தன்மை, மனித உரிமைகள் ஆகிய விழுமியங்களைப் பேணிவருவதுடன், அதன் மக்கள் சட்டத்தையும், ஒழுங்கையும் மதிப்பதையும், பார்ப்பது மாத்திரமல்லாது அவை சீராக நடைபெறுவதையும், அதிகாரிகள் மேற்கொள்வது அவசியமாகும் என்று குறிப்பிட்டுள்ளது.

ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு (AHRC) குற்றப் புலனாய்வுப் பிரிவின் (CID) விசேட புலனாய்வுப் பிரிவுடன் (SIU) இந்த விடயம் குறித்து அரசாங்கம் சரிவரப் புலனாய்வு செய்ய வேண்டுமெனக் கேட்டுள்ளது. குதறிப் வாயந்த விடேட குற்றப்புலனாய்வுப் பிரிவினால் விசாரணைகள் நடத்த விசேட முயற்சி மேற்கொள்ளப்படாவிட்டால் விசாரணைகள் தவறாகக் கையாளப்படும் சாத்தியம் உள்ளது என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

ஊழலை எதிர்ப்பவர்களை ஆதரித்து, துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்படுவோரைக் காப்பாற்றி அரசாங்க சேவை தொழிற்சங்கங்கள் சம்மேளனம் (LOPSITU) நீதி நிலைக்கட்டும் தெரிவித்திருப்பதுடன், இந்தக் கோழைத்தனமான செயலின் பின்னால் உள்நோக்கம் இருப்பதாக சந்தேகிக்க இடமிருப்பதாகவும், இது ஜனநாயக இலட்சியங்கள் மீதான குரூரத் தாக்குதலாகக் கருதப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளது.

PAFEREL இத்தாக்குதல் பற்றி விபரிக்கையில், சமூகத்தில் நசுக்கப்பட்ட மக்களின் துயரங்களை தன்மீது ஏற்றிய ஒரு மனிதனுக்கு எதிரான தாக்குதலாக இது உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது. ஒரு பிரஜை தனது மனச்சாட்சிக்கு அமைய எதனையும் எதிர்க்கும் உரிமையைக் கொண்டிருக்க கூடாது எனப்தையா இத்தாக்குதல் உணர்த்துகிறது?

அவ்வாறெனில் துரதிருஷ்டவசமாக நசுக்கப்பட்ட மக்களுக்கு நீதி இல்லையெனப்தால் எமது சமூகத்தில் இது கோடான நடைமுறையாகும் என்றும் அது கூறியுள்ளது.

ஊழல் அதிகரிப்பதுடன் ஒரு விரித்திரமான செயற்பாடு ஊழல் நிறைந்த அபாயமும் நிறைந்த லாபமும் கொண்டது. அதனை தைரியத்துடன் எதிர்ப்பவர்களுக்கு கொடுக்க வேண்டிய விலை மிகவும் உயர்ந்ததாகும். வெலியாமுன, இலங்கையில் மனித உரிமைகளை காக்கும் மதிப்புக்குரியவர். நாட்டின் நன்கு தெரிந்த ஊழல் எதிர்ப்பாளர்.

தைரியம், நேர்மைத்திறன் என்பன மீதான ஒரு தாக்குதல்

போர்னியோ ஏசியாடெஸ்க், ஏரான்ஸ்பறன்ஸி இன்டர்நெஷனலின் முன்னாள் தலைவரும், தற்பொழுது இந்தியாவின் பெங்களூரில் உள்ள பொது விவகார மையத்தின் பணிப்பாளருமான கலாநிதி கோபகுமார்தம்பி, கைக்குண்டு வீச்சு பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், வன்முறையின் மொழியானது, தைரியசாலிகளை மௌனமாக்கும் வகையில் மீண்டும் எழுப்பப்பட்டுள்ளது. நீதி, வெளிப்படைத் தன்மை எனப்வற்றை நிலைநாட்டுவதில் உள்ள அயராங்களை ஜே.சி.வெலியமுனவின் வீடு மீதான கைக்குண்டு தாக்குதல் நிரைவூட்டுகிறது.

இத்தருணம், அச்சமடைந்த ஒதுங்கிவிடத் தக்கதல்ல. இலங்கையில் சிவில் உணர்வுள்ள மக்கள் அமைவரும் வெளியே வந்து அச்சுறுத்தியும் பயமுறுத்தியும் செயற்படும் சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் கைகோர்த்து நிற்க வேண்டும். மௌனம் என்ற கலாசாரத்தில் மயங்கும் நேரம் இதுவல்ல. ஊழல், துஷ்பிரயோகம் என்ற தீமைகளுக்கு எதிராக ஒருங்கிணைந்து செயற்படுவற்கான தருணமாகும். கைக்குண்டின் பின்னால் உள்ள சேதி தெளிவானது. நாம் வெற்றி பெறுகிறோம். அவர்கள் தோற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதைபிடுத் தவறாக விளங்கிக் கொள்ள வேண்டாம். நாம் ஜனநாயகத்தின் விரோதிகளை ஓட ஓட விரட்டுகிறோம். துப்பாக்கிகள், குண்டுகளின் மொழியைப் பேசுபவர்கள் கோழைகள். இத்தகைய நேரங்களிலேயே தேசத்தின் திடம் சோதிக்கப்படுகிறது. எம்மை அடிமைப்படுத்த முடியாது என்று உரத்த குரலில் பொதுவான சமூகத்தை கேட்கும் நேரம் இது. மக்களின் மனோதிடத்தில் எனக்கு நம்பிக்கையுண்டு. சுதந்திரம், நீதி என்ற மொத்த வெளிப்பாடும் விருப்பமுமதான ஜனநாயகத்தை ஒரு இலட்சியமாக்குகிறது. இந்த நம்பிக்கையே அண்மையில் எமக்கிடையே ஒரு உரையாடல் இடம்பெற்றது. இலங்கையை நேர்மைத் திறனுள்ள தேசமாக்குவதற்கான அவரது தரிசனம் பற்றிப் பேசுகையில் அவரது குரலில் இருந்த வேகமும் தீட்சங்கப்பும் எனக்கு நினைவில் உள்ளது. உங்கள் உயிர் பற்றிய அச்சம் இல்லையா என்று கேட்டபோது, பார்க்கலாம் என்று அவர் பதிலளித்தார். அவரது இரு குழந்தைகள் உட்பட அவரின் குடும்பம் மீதான இந்தக் குரூரத் தாக்குதல் தைரியத்திற்கும், நேர்மைத் திறனுக்கும் எதிரான தாக்குதலாக ஜனநாயகம் நீதி என்ற அடித்தளங்களுக்கு எதிரான தாக்குதலாக சித்திக்கும் பார்க்க வேண்டிய தருணம் இதுவாகும்.

வெலியாமுன போன்ற பொதுமக்கள் நலன் விரும்புபவர்களை குரலற்றவர்களுக்கும், தம்மைப் பாதுகாக்க முடியாதவர்களுக்குமாக நின்று குரல் எழுப்ப வைக்கின்றது.

மக்களாகிய நாம் மனித உணர்வு என்ற பெரும் கவரை உருவாக்க எவ்வாறு ஜக்கியமாகக் கிளர்ந்தெழுகிறோம் என்பதில் ஜனநாயகத்தின் உண்மைத் தன்மை அடங்கியுள்ளது. வெலியாமுனவுக்கும், அவரது குடும்பத்தின் TISL இல் உள்ள அவரது சகாக்கள், அவரது நலன் விரும்பிகள், ஆதரவாளர்கள் ஆகியோரிற்கும் சோதனைக் காலம் இதுவாகும். எனினும், ஊழல் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்க்கப்பட்டிருக்கும், வலுவான புனித யுத்தம் மேலும் வலுவடையும் என்பது எனது நம்பிக்கை. ஏனெனில் இந்த யுத்தப் பின்னணியில் உள்ள தார்மீகம் அழைக்க முடியாத, நிறுத்தப்பட முடியாத ஒன்றாகும். இது பின்னடைவுக்கும் உட்படமாட்டாது.

வெலியாமுனவின் நண்பர் என்ற வகையிலும் அவரும், அவரது குழுவினரும் ஆரம்பித்திருக்கும், விடயத்திற்கு எனது பூரண ஆதரவைத் தெரிவிக்கின்றேன். நான் இலங்கையை எனது தாயகமாகக் கருதுகிறேன். இந்நாட்டு மக்களின் நட்புணர்வும், மனித உணர்வுக்கான மதிப்பும் என்னை ஆழமாகப் பாதித்துள்ளன. எனது வீட்டில் கைக்குண்டுகளுக்கோ, துப்பாக்கிகளுக்கோ குண்டுகளுக்கோ இடமில்லை என்பது தெளிவாகும். அச்சத்திற்கு எதிரான இந்தப் போரில் வெற்றி காணவே